முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 829/2015

தேதி : 10.07.2026

(வா.சா.1) – திரு.கணேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நிருபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் என் தகவலின்பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 உண்மையில் பிரதிவாதி எழுதி கொடுத்திருப்பானால் வழக்கு தாக்கல் செய்யும் போதே அதை கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8ல் பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றும், ஆனால் அதில் பிரதிவாதியுடையது அல்ல என்றும், எனவே அதை அறிவியல் ஆய்விற்கு உட்படுத்துவதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.8ல் யாருக்கு யார் எந்த கடன் தொகை, எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்ற விபரங்கள் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான், பிரதிவாதி கொடுக்க வேண்டிய தொகைக்கு கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.8 பிரதிவாதி எனக்கு நேரடியாக எழுதிக்கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, வேலுசாமி மூலமாக எனக்கு எழுதிக்கொடுத்தார்கள். அந்த ஆவணத்தை எழுதும் போது நான் இல்லை என்றால் சரிதான். எனவே அந்த ஆவணத்தை யார் எழுதியது, யார் கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் பவர் பத்திரத்தை பார்த்தேன், அதிலுள்ள கையெழுத்தும், வா.சா.ஆ.8 இதிலிருந்த கையெழுத்தும் ஒன்றாக தான் இருந்தது. வா.சா.ஆ.6 முதல் 8 ஆவணங்களை பிராதுடன் தாக்கல் செய்யவில்லை என்றும், வா.சா.ஆ.8 பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்.K./ ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.